<u>கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம்,  தாராபுரம்</u>

<u>MCOP No. 140/2018</u> 20.02.2025 ம.சா.1

சாட்சியின் சாட்சியம்  திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M.,  கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மங்கம்மாள் | தொழில் | |
| க/பெ | கருப்புசாமி | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| ஜாதி | | மாவட்டம் | |
| சமயம் | | | |

<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

கருப்புசாமி என்பவரது இறப்பு சான்று புகைப்பட நகல் அசலுடனஒப்பிட்டு பார்க்ப்பட்டடு ம.சா.ஆ.8,   கருப்புசாமி என்பவரது வாரிசு சான்று கணினி நகல் ம.சா.ஆ.9.   மனுப்படி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் என்னுடைய கணவர் என்றால் சரிதான்.  என்னுடைய கணவரின் வயது தொழில் வருமானத்தை காட்டும் ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான்  என்னுடைய கணவரின் இரண்டாவது மனைவி என்று சொன்னால் சரியல்ல நான் முதல் மனைவி. அவருக்கு நாகம்மாள் என்ற முதல் மனைவி என்றாலும் அவர் இறந்துவிட்டார் என்றாலும் அவர்களுக்கு கிருஷ்ணவேணி, கண்ணகி ஆகிய இரண்டு மகள்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். அவர்கள் இருவரும் என்னுடைய கணவரின் வாரிசுகள் என்றாலும் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்றத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.  நான் மேற்படி உண்மைகளை மறைத்து வாரிசு சான்றிதழை தவறாக பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.  எனவே நான் தாக்கல் செய்துள்ள வாரிசு சான்று ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.  உரிய நபர்களை சேர்க்காததால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது  என்னுடைய கணவர் இரண்டாம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்புறம் அமர்ந்து சென்றார் என்றால் சரிதான். தாராபுரத்திலிருந்து  கரூர் செல்லும் மெயின் ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான்.  எதிரில் இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்த முதலாம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாக ஓட்டி

வந்து என்னுடைய கணவர் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல இரண்டு ஓட்டுனர்களின் தவறினாலும் விபத்து ஏற்பட்டதாகச் சொன்னார்கள். மாதிரி வரைபடத்தில் விபத்து கிழமேல் ரோட்டின் வடபுறம் நடந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி ஒன்றாம் எதிர்மனுதார்தான் தவறான திசையில் வாகனத்தை ஓட்டி வந்து என்னுடைய கணவர் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்பது தெரிய வருகிறது என்று சொன்னால் சரியல்ல. விபத்து தொடர்பாக புகார் கொடுத்த மணிவேல் என்னுடைய உறவினர் என்றால் சரிதான். அவர் தனது புகாரில் விபத்திற்கு ஒன்றாம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து குறித்த முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை ஆகியவை 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு ஒன்றாம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்பதால் எனக்கு அவர்தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்து பில்கள் அனைத்தும் மனுக்காக மிகைப்படுத்தி பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது என்னுடைய கணவர் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுநருக்கு செல்ல தக்க ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 மற்றும் 3 எதிர் மனுதாரர்கள் பாலிசி விதிகளுக்கு மீறி செயல்பட்டுவார்கள் என்று சொன்னால் சரியில்லை. நான்காம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரி அல்ல. நான்காம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.02.20 19:35:21 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.